6. இறுதித் துணை நிதி நிலை அறிக்கை, 1994-95 அளித்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1994-95-ஆம் ஆண்டுக்கான செலவு குறித்த இறுதித் துணை நிதிநிலை அறிக்கை. மாண்புமிகு நிதி அமைச்சர்.

முற்பகல் 11.40

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95-ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன்வைக்கிறேன். இம்மாமன்றத்தின் முன்வைக்கப்பட்டுள்ள இத்துணை மதிப்பீடுகளில் வருவாய்க் கணக்கைச் சேர்ந்த ரூ. 530.81 கோடியும், மூலதனம் மற்றும் கடன் கணக்குகளைச் சேர்ந்த ரூ. 316.77 கோடியும் அடங்கும்.

2. இம்மானியக் கோரிக்கைகளில் இடம் பெற்றுள்ள முக்கியமான திட்டங்கள் குறித்து நான் சுருக்கமாகக் கூற விழைகிறேன்.

3. காவல் துறையில் பயனற்றதென ஒதுக்கப்பட்ட வண்டிகளுக்குப் பதிலாகப் புதிய வண்டிகளை வாங்குவதற்காக "மானியக் கோரிக்கை எண் 15. காவல் துறை" என்பதன் கீழ், ரூ. 1.28 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறைக்காகப் படைக்கலன்களும், வெடிமருந்துகளும் வாங்குவதற்காக இந்த இறுதித் துணை மதிப்பீடுகளில் மேலும் ரூ. 8.45 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

4. அரசு சாரா தொடக்கப் பள்ளிகளுக்கும், இடைநிலைப் பள்ளிகளுக்கும் மானியம் வழங்குவது குறித்த கூடுதல் செலவிற்காக "மானியக் கோரிக்கை எண் 17 கல்வி" என்பதன் கீழ், ரூ. 21.95 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. பள்ளிச் சீருடைகளை இலவசமாக வழங்கும் திட்டத்திற்கான கூடுதல் செலவிற்காக ரூ. 8.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. எட்டாம் உலகத் தமிழ் மாநாடு தொடர்பாகத், தஞ்சாவூரில் உள்ள தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு உதவிமானியமாக ஏற்கெனவே எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ள முன்பணத்தை ஈடு செய்ய ரூ. 45 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. விளையாட்டு மேம்பாட்டு அதிகார மன்றத்தின் வழக்கமான பணிகளுக்காகவும், ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பின் போட்டி விளையாட்டுகள் தொடர்பான செலவிற்காகவும் அந்த அதிகார மன்றத்திற்கு மொத்த மானியமாக ரூ. 21.09 கோடி வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

5. அரசு நிறுவனங்கள், மருத்துவமனைகளுக்கு மருந்துப் பொருள்களையும், அறுவைச் சிகிச்சை சாதனங்களையும் வாங்கி, வழங்க தமிழ்நாடு மருத்துவப்பணிகள் நிறுவனத்திற்கு மானியமாக எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ரூ. 10 கோடி முன்பணம் வழங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து ஏற்கெனவே வழங்கப்பட்ட முன்பணத்தை அந்த நிதிக்கு ஈடு செய்ய இந்தத் துணை மதிப்பீடுகளில், "மானியக் கோரிக்கை எண் 18 மருத்துவம்" என்பதன் கீழ், ரூ. 10 கோடி சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனத்திற்கு மானியம் வழங்குவது குறித்த கூடுதல் செலவிற்காக ரூ. 10 கோடி கூடுதலாக சேர்க்கப்பட்டுள்ளது.

6. மீனவர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டத்திற்காக, "மானியக் கோரிக்கை எண் 21 மீனளம்" என்பதன் கீழ், 2.80 கோடி கூடுதலாக ஒதுக்கப்பட்டுள்ளது.

7. ஜனதா வேட்டிகள், சேலைகள் வழங்குவது தொடர்பாக, கூடுதல் உதவித் தொகைக்காக "மானியக் கோரிக்கை எண் 25, கைத்தறியும், துணித் தொழிலும்" என்பதன் கீழ், ரூ. 5.08 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் மக்களுக்கு இலவசமாக வேட்டிகள், சேலைகள் வழங்குவது குறித்த கூடுதல் செலவிற்காக ரூபாய் 14.29 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சிட்ட நூலுக்கான கூடுதல் உதவித் தொகை குறித்த செலவுக்காக, எதிர்பாராச் செலவு நிதியிலிருந்து "கோ ஆப் டெக்ஸ்" நிறுவனத்திற்கு ஏற்கெனவே ரூ. 1.75 கோடி முன்பணம் வழங்கப்பட்டுள்ளது. இந்த முன்பணத்தை எதிர்பாராச் செலவு நிதிக்கு ஈடு செய்ய, இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

8. 1994-95-ஆம் ஆண்டில் வேளாண்மை மேம்பாட்டு பன்னாட்டு நிதி (IFAD) உதவி பெறும் மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்காக மொத்தம் ரூ. 10.13 கோடி வழங்க அரசு அனுமதி வழங்கியுள்ளது. இதற்காக இந்தத் துணை மதிப்பீடுகளில் "மானியக் கோரிக்கை எண். 29 சமூக நலன்" என்பதன் கீழ், ரூ. 4.38 கோடி கூடுதல் நிதியொதுக்கம் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்திற்குப், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு வழங்கப்படும் அரிசி குறித்த விலை வேறுபாட்டுத் தொகையை வழங்க, அரசு ரூ. 51.06 கோடிக்கு அனுமதி வழங்கியுள்ளது. இத்தொகை, இந்தத் துணை மதிப்பீடுகளில் ''மானியக் கோரிக்கை எண் 29 சமூக நலன்'' என்பதன் கீழ்ச் சேர்க்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11.45

9. 1994-95-ஆம் ஆண்டில் ஆதி திராவிடர்களுக்கு கான்கிரீட் வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக அரசு மொத்தம் ரூ. 28.62 கோடி

அனுமதித்துள்ளது. ''மானியக் கோரிக்கை எண் 30 - பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்'' என்பதன் கீழ் இந்தத் துணை மதிப்பீடுகளில் இத் திட்டத்திற்குக் கூடுதலாக ரூ. 12.37 கோடி தேவைப்படுகிறது. ஆதி திராவிடர் இடுகாட்டிற்குச் செல்வதற்கு நடைபாதை வசதி செய்து கொடுப்பதற்கு, நிலம் கையகப்படுத்துவதற்குத் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் ரூ. 5 கோடியும் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கான வீட்டு மனைகளுக்கு நிலம் கையகப்படுத்துவதற்கு ரூ. 12.27 கோடி கூடுதல் நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஆதி திராவிடர்களுக்கு ஒரு குடிசைக்கு ஒரு விளக்கு வசதி செய்து கொடுக்கும் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கான மானியம் ரூ. 3.45 கோடியும் இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

10. மிகவும் பிற்படுத்தப்பட்ட சில வகுப்பினர்களுக்கு வீட்டு மனைகள் வழங்குவதற்காக, நிலம் கையகப்படுத்த, ''மானியக் கோரிக்கை 31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் நலன்'' என்பதன் கீழ் ரூ.1.23 கோடி கூடுதல் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

11. பேருந்து வழித் தடச் சாலைகளைப் பராமரிக்கும் திட்டத்தை செயல்படுத்த கூடுதலாக ''மானியக் கோரிக்கை எண் 38. சாலைகளும் பாலங்களும்'' என்பதன் கீழ் ரூ. 3.87 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு வேளாண்மை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், ஊரகச் சாலைகள் பகுதிக்கு, "மானியக் கோரிக்கை எண் 56 சாலைகள் பாலங்கள் குறித்த மூலதனச் செலவு'' என்பதன் கீழ், கூடுதலாக ரூ. 5.15 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சேதமடைந்த பாலங்களைச் சீரமைப்பதற்கு ரூ. 3.69 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

12. சிறு சேமிப்பு முதலீட்டாளர்கள் ஊக்கத் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட கூடுதல் செலவைச் செய்வதற்கு ''மானியக் கோரிக்கை எண் 42 பல்வகை'' என்பதன் கீழ் ரூ. 12.53 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

13. கிருஷ்ணா நதிநீர்த் திட்டத்திற்காக ஆந்திர பிரதேச அரசுக்குக் கூடுதல் மூலதன மானியத் தொகை வழங்க ''மானியக் கோரிக்கை எண் 48 குடிநீர் வழங்கல்'' என்பதன் கீழ் ரூ. 30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நரிப்பையூரில், தண்ணீரிலுள்ள உவர் தன்மையைப் போக்கும் நிலையத்திற்கு இந்த அரசு ரூ. 10.75 கோடி அனுமதித்துள்ளது. இத்திட்டம் குறித்த செலவைச் செய்வதற்கு, இந்தத் துணை மதிப்பீடுகளில் ரூ. 6.72 கோடி சேர்க்கப்பட்டுள்ளது.

14. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகள் இணையத்தை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு நூற்பு ஆலைகள்

இணையத்திற்குப் பங்கு மூலதன நிதியுதவிக்காக, ''மானியக் கோரிக்கை எண் 53 தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு'' என்பதன் கீழ் ஒதுக்கப்பட்ட ரூ. 25 கோடி நிதியொதுக்கம் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

15. தமிழ்நாடு குடிநீர் வழங்கல்-துப்புரவுத் திட்டத்தைச் செயல்படுத்த தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு அரசு ரூ. 25 கோடி வழிவகை முன்பணம் அனுமதித்துள்ளது. உள்ளாட்சி மன்றங்களிடமிருந்து தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு வரவேண்டிய பராமரிப்புச் செலவு தொடர்பாக, அவ்வாரியத்திற்கு மேலும் ரூ. 16.77 கோடி அனுமதிக்கப்பட்டுள்ளது. இத் தொகைகள், இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவுத் தலைமை வங்கிக்கும், தமிழ்நாடு செய்தித்தாள்—காகித நிறுவனத்திற்கும் முறையே ரூ.110 கோடி, ரூ. 50 கோடி வழிவகை முன்பணத்தை அரசு அனுமதித்துள்ளது. இத்தொகைகளும் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளன. பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகத்திற்கு, வழிவகை முன்பணமாக அனுமதிக்கப்பட்ட ரூ. 10 கோடியும் இறுதித் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

16. இத்துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கியமான அம்சங்கள் குறித்து, இங்கு நான் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். இவை குறித்தும், ஏனைய செலவினங்கள் குறித்தும் உரிய முழு விவரங்களும் பேரவை முன்னர் வைக்கப்பட்டுள்ள விளக்கக் குறிப்பில் விரிவாக இடம் பெற்றுள்ளன. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1994-95—ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றம் ஏற்று இசைவளிக்குமாறு வேண்டுகிறேன். வணக்கம்.

கோரிக்கை

A. வருவாய்க் கணக்கில் செலவு. (ரூபாய் ஆயிரத்தில்)

1.	நிலவரித் துறை	8,55
2.	மாநில ஆயத் தீர்வைத் துறை	1
3.	மோட்டார் வண்டிகள் குறித்த சட்டங்கள்—நிருவாகம்	1
4.	பொது விற்பனை வரியும், ஏனைய வரிகளும், தீர்வைகளும்—நிருவாகம்	3,97,42

கோரிக்கை	(ரூபாய் ஆயிரத்தில்)
A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி	
5. முத்திரைத் தாள்கள்—நிருவாகம்	58,94
6. பத்திரப் பதிவு	1,05,68
7. மாநிலச் சட்ட மன்றம்	82,37
8. தேர்தல்கள்	6,27,28
9. மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ..	10,06,86
11. மாவட்ட நிருவாகம்	21,28,98
13. நீதி நிருவாகம்	2,39,15
14. சிறைச்சாலைகள்	6,35,11
15. காவல் துறை	6,96,65
16. தீயணைப்புப் பணிகள்	1,50,04
17. கல்வி	50,04,66
18. மருத்துவம்	14,06,47
19. பொதுச் சுகாதாரம்	25,77
20. வேளாண்மை	51,98,10
21. மீனளம்	4,69,50
22. கால்நடை வளர்ப்பு	3,98,83
23. கூட்டுறவு	1,91,36
24. தொழில்கள்	63,44
25. கைத்தறியும், துணித் தொழிலும்	28,96,81
26. கதர்-கிராமத் தொழில்கள்	1,14,67
27. ஊரக வளர்ச்சி	1
29. சமூக நலன்	28,27,84
30. பழங்குடியினர், ஆதி திராவிடர் முதலியோர் நலன்	39,77,20

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை A. வருவாய்க் கணக்கில் செலவு—தொடர்ச்சி	(ரூபாய் ஆயிரத்தில்)
31. பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், சீர் மரபினர் முதியோர் நலன்	1,36,33
32. வீட்டு வசதி	11,60,02
33. நகர்ப்பகுதி வளர்ச்சி	20,07
35. பாசனம்	10,66,24
36. பொதுப் பணிகள்—கட்டிடங்கள்	5,34,89
37. பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும், கருவிகளும், தளவாடமும்	2,44,59
38. சாலைகளும் பாலங்களும்	9,46,28
39. சாலைப் போக்குவரத்துப் பணிகளும் கப்பல் போக்குவரத்தும்	15,09
40. இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு ..	1
41. ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்	13,07,22
42. பல்வகை	32,32,01
44. காட்டுவளத் துறை	35,55
45. இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும்	7,33,63
46. செய்தி-திரைப்படத் தொழில் நுட்பவியல் ..	7,58,68
47. ஊரகத் தொழில்கள்	1,36,96
48. குடிநீர் வழங்கல்	50,61,99
49. நகராட்சி நிருவாகம்..	9,40,74
50. சுற்றுலா	2,34,97
51. தமிழ் வளர்ச்சி-பண்பாடு	5,76,07
மொத்தம்—A. வருவாய்க் கணக்கில் செலவு ..	**4,58,53,05**

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

கோரிக்கை

	B. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு—தொடர்ச்சி	(ரூபாய் ஆயிரத்தில்)
53.	தொழில் வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு	25,85,93
54.	பாசனம் குறித்த மூலதனச் செலவு ..	1
55.	பொதுப் பணிகள்-கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு	4,89,14
56.	சாலைகள்-பாலங்கள் குறித்த மூலதனச் செலவு	26,46,61
57.	சாலைப் போக்குவரத்துப் பணிகள்-கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு ..	1,51,80
58.	காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு	1,93,73
59.	ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு	1,42,31
60.	பல்வகை மூலதனச் செலவு	7
	மொத்தம்—B. வருவாய்க் கணக்கின்கீழ் வராத மூலதனச் செலவு	**62,09,60**
	C. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும்	
61.	மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்	2,53,05,85
	பெரு மொத்தம்	**7,73,68,50**

7. வரவு—செலவுத் திட்டம், 1995-96— பொது விவாதம் — தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1995-96—ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டத்தின்மீது பொது விவாதம். பேசுகிற ஒவ்வொரு மாண்புமிகு உறுப்பினரும், சரியாக 10 நிமிடங்களுக்குள் பேசி முடித்துக்கொள்ள வேண்டும். அடுத்து ஒரு நிமிடம் என்று நாங்கள் அனுமதிப்பது, உங்கள் உரையை நிறுத்துவதற்காகத்தான் பயன்படுத்தப்படவேண்டும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். திரு. சி. ஞானசேகரன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS